# தமிழ்நாடு அரசு

## சுருக்கம்

குத்தகை - நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் கட்டப்படும் கடைகளில் ஒன்றினை ஊனமுற்றோர்களுக்கு ஒதுக்கீடு செய்தல் குறித்த ஆணைகள் வெளியிடப்படுகின்றன.

---

### நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நநி4) துறை

அரசாணை (பத்தாண்டு) எண்.100 நாள்: 16.2.2000

**படிக்க:**

பார்வை: (1) அரசுக் கடித எண்.872/நநி4/94-2, ந.நி.(ம).கு.வ துறை நாள்: 28.11.94.
(2) அரசுக் கடித எண்.16222/நநி4/93-2, ந.நி(ம).கு.வ துறை நாள்: 25.1.94.
(3) நகராட்சி நிர்வாக ஆணையரின் கடிதம் மு.மு. எண்.46079/97/ஆர்3, நாள்: 24.6.97.
(4) அரசுக் கடித எண்.11421/நநி4/96-6, நாள்: 11.7.97.

.....

**ஆணை:**

படிக்கப்பட்ட ஒன்று மற்றும் இரண்டில் கண்டுள்ள கடிதங்களில் நகராட்சிகளுக்குச் சொந்தமான கடைகள் மற்றும் இடங்களை உடல் ஊனமுற்றோர்களுக்கு ஊனமுற்றவர்கள் மட்டுமே பங்கு பெறும் விதத்தில் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளிகள் கோரி அவர்களுக்கு கடைகள் மற்றும் இடங்களை குத்தகைக்கு விட அனைத்து நகராட்சி ஆணையர்களுக்கும் அறிவுரை வழங்குமாறு நகராட்சி நிர்வாக இயக்குநர் கேட்டுக் கொள்ளப்பட்டார்.

2. பின்பு நகராட்சி நிர்வாக இயக்குநர் பரிந்துரையின் அடிப்படையில் மேலே முதல் மற்றும் இரண்டாவதாகப் படிக்கப்பட்ட கடிதங்களில் வெளியிடப்பட்ட அறிவுரைகள் ரத்து செய்யப்பட்டு நான்காவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில் ஆணைகள் வெளியிடப்பட்டன.

3. நகர்ப்புற உள்ளாட்சி மன்றங்களுக்குச் சொந்தமான கடைகளில் சிலவற்றை உடல் ஊனமுற்றவர்களுக்கு ஒதுக்கீடு செய்வது குறித்து ஊனமுற்றோர் அமைப்புகள் கொடுத்த விண்ணப்பங்கள், மாநில ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் முன்வைக்கப்பட்ட வேண்டுகோள்கள் அடிப்படையில், இப்பொருள் குறித்து அரசு மறுபரிசீலனை செய்தது. சாதாரண நிலையில் உள்ளவர்கள் போலன்றி ஊனமுற்றவர்களின் கோரிக்கையை மனிதநேயத்துடன் அணுகவேண்டியதன் அவசியம் கருதி நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் உள்ள வணிக வளாகத்தில் ஒரு கடை மட்டும் ஊனமுற்றோருக்காக ஒதுக்கீடு செய்ய வேண்டுமென அரசு இவண் ஆணையிடுகிறது. இந்த ஒதுக்கீடு (கடை ஏலம் விடுவது உட்பட) நடைமுறையிலுள்ள அனைத்து விதிமுறைகளுக்கு உட்பட்டு செயல்படுத்தப்பட வேண்டும். அத்துடன் கடை நடத்த உரிமம் பெறும் ஊனமுற்றவரே கடையில் அமர்ந்து நேரடியாக வியாபாரத்தில் ஈடுபட வேண்டும் என்ற நிபந்தனையும் உள்ளாட்சி அமைப்புகளால் விதிக்கப்பட்டு அது நடைமுறையில் உறுதிப்பட வேண்டும் அரசு ஆணையிடுகிறது.

4. இப்பொருள் குறித்த மேல்நடவடிக்கை தொடர்வதற்கும் அனைத்து நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கும் தக்க அறிவுரை வழங்குமாறும் இது குறித்து விதிகளுக்கு தகுந்த திருத்தங்கள் வெளியிடுவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்குமாறும் நகராட்சி நிர்வாக ஆணையர், பேரூராட்சிகளின் இயக்குநர் ஆகியோர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

/ஆளுநரின் ஆணைப்படி/

எஸ். மாலதி,
அரசு செயலாளர்.

பெறுநர்:
1. நகராட்சி நிர்வாக ஆணையர், சேப்பாக்கம், சென்னை.5
2. இயக்குநர், சமூகநலத் துறை, சென்னை.5.

நகல்: 1. ந.நி(ம)கு.வ(பா.ந.2) துறை
2. .....

//உண்மை நகல்// [signature] 2/8/2000

உதவி இயக்குநர் (பணியமர்த்துதல்)